கழிவுநீர் தொழிற்சாலைகளால் மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சமீபத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்திலே கலந்து கொண்ட விவசாயிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய இந்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுச் சுத்திகரிப்பு நிலையங்கள், சுற்றுக்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் பட்ட, பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு அரசின் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

மாணவர் விடுதி

__4268__—முனைவர் கோவி. செழியன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 15]

திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர் பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் சார்பாக மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அதில், ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைச் சார்ந்த 50 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள். மயிலாடுதுறை-கும்பகோணம் இடையே திருவிடைமருதூர் இருக்கிற காரணத்தால், பிரதான சாலையில் வாடகைக் கட்டடத்தில் அந்த விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது. திருவிடைமருதூர் பேரூராட்சிக்குட்பட்ட கோயில்சன்னாபுரம், விஸ்வநாதபுரம் ஆகிய இடங்களில் விடுதிகள் கட்டுவதற்குப் போதுமான இட வசதியும் இருக்கிறது. கிராம நிருவாக அதிகாரி மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் சர்வே எண்ணுடன் அதற்கான இடமும் குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. சாலை ஓரத்தில் இருக்கிற விடுதியை, சற்று ஒதுக்குப்புறமாக, மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடிய வகையில், அரசு சொந்தக் கட்டடம் கட்டித்தருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இருக்கக்கூடிய பொதுவான ஒரு கோரிக்கை, 50 மாணவர்கள் மட்டும் தங்கிப் பயிலக்கூடிய அந்த விடுதியில் சற்று கூடுதல் மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய சூழலையும் அரசு உருவாக்கித் தருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக இயங்கிவரும் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149 (குறுக்கீடு) உங்களுடைய கோரிக்கை நிறைவேறிவிட்டதே! மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில், திருப்பனந்தாள் மாணவியர் விடுதி, ஆடுதுறை மாணவியர் விடுதி, ஆடுதுறை மாணவர் விடுதி என்று 3 பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகள் இருக்கின்றன. ஆனால், அவை அனைத்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆனால், என்னுடைய தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக 3 விடுதிகள் இருக்கின்றன. 3 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் இருக்கிறது. நான் முன்னதாகக் கேட்ட கேள்வியையும் சேர்த்து 4 விடுதிகளும் வாடகைக் கட்டடத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் இயங்கி வருகின்றன. எனவே, அந்த 4 விடுதிகளில் குறைந்தபட்சம் இந்த ஆண்டு இரண்டு கட்டடமாவது அரசு கட்டித்தருமா என்று அறிய விரும்புகிறேன்.*

கூடுதலாக, திருப்பனந்தாளில் புதிய மாணவர் விடுதியும், பந்தல்நல்லூரில் புதிய மாணவியர் விடுதியும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 51 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 34 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், 16 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஒரு விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6804—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆசனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 21-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர்